DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.998/2024
Deposition of Witness for L.W.9 / P.W.5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சசிக்குமார் | | | |
| Father's Name | : | நடராஜன் | Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர், தெற்கு போக்குவரத்து. |
| Village | : | | | | |
| District | : | ஈரோடு | Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.**2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**(எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**
**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ஈரோடு தெற்கு போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, கடந்த 06.11.2023 ஆம் தேதி மதியம் 12.00 மணியளவில், ஈரோடு, வெள்ளோடு, கவுண்டச்சிபாளையம், மேற்கு வீதி என்ற முகவரியை சேர்ந்த சத்தியமூர்த்தி என்பவர் மகள் புவியரசி, வயது 21, என்பவர் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் குறை தீர்ப்பு நாளில் அளித்த புகாரானது 27.11.2023 அன்று G3/E-6175695/1704/SPGDP 2023 மூலம் எங்கள் காவல் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்று அதன் அடிப்படையில் மனுதாரரை அழைத்து விசாரணை செய்துபுகார் மனு ரசீது எண்.91/2023 வழங்கினேன். பின்னிட்டு விசாரணை முடிவுற்று எதிரி மீது 09.12.2023 அன்றுஈரோடு அரசு மருத்துவமனை காவல் நிலைய குற்ற எண். 65/2023-ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 341, 352, 354(D), 506(i), 4 of TNPHW Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.** மேற்படி முதல் தகவலின் அசலை கனம் நீதிமன்றத்திற்கு

அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

2. 27.11.2023 ஆம் தேதி அன்று எனக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக குறை தீர்ப்பு நாளில் அளிக்கப்பட்ட மனு கிடைத்ததில் இருந்து நான் 09.12.2023 அன்று தான் முதல் தகவல் செய்துள்ளேன், இடைப்பட்ட காலதாமதத்திற்கான காரணம் என்னவென்றால், புகார்தாரருக்கு அவர் அளித்த புகாருக்கான புகார் மனு ரசீது வழங்கப்பட்டது, பின்னர் புகார்தாரருக்கும், எதிரிக்கும் காவல் நிலையத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, முதல் நிலை விசாரணை நடத்தப்பட்டது, பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காரணத்தினால் மேற்கண்டவாறு காலதாமதம் ஏற்பட்டது. நான் காவல் நிலையத்திலிருந்து அழைப்பாணை அனுப்பியதாக சொல்லி உள்ளேன் மேற்படி அழைப்பாணை அனுப்பிய விபரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

3. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னர் மேற்கொண்டு புலன்விசாரணை யாரால் மேற்கொள்ளப்பட்டது என்றால், நான் ஆய்வாளரின் பார்வைக்கு சமர்ப்பித்து விட்டேன். ஆய்வாளர்தான் புலன் விசாரணை செய்தா. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னிட்டு புகார்தாரரை எத்தனை முறை காவல் நிலையம் அழைத்து விசாரணை செய்தும் என்றால், ஒரே ஒருமுறை மட்டும் விசாரணை செய்தும். மேற்படி விசாரணையில் புகார்தாரர் தன்னுடைய புகைப்படத்தை முகநூல், வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் எதிரி பதிவிட்டுள்ளார் என்று என்னுடைய விசாரணையில் தெரிவித்துள்ளார், அதற்குண்டான மின்னணு ஆவணங்கள் ஏதேனும் சமர்ப்பித்துள்ளாரா என்றால், இல்லை.

4. என்னுடைய விசாரணையில் இந்த குற்றத்தின் மைய நோக்கமே புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே புகைப்படத்தை சமூக வலைதளங்களில் பதிவிட்டது தான் என்பது தெரியவந்தது என்றால், சரிதான் புகார்தாரர் என்னிடம் சொல்லியுள்ளார். பின்னிட்டு மேற்படி புகாரில் மின்னணு சாதனங்கள் தொடர்புடையதால் இது குறித்து சைபர் கிரைம் துறைக்கு புகாரிணை மேலதிக

விசாரணைக்கு பரிந்துரை செய்தேனா என்றால், இல்லை, மின்னணு சாதனங்கள் எதுவும் என்னிடம் விசாரணையில் புகார்தாரர் ஒப்படைக்கவில்லை. புகார்தாரர் எதிர் மீது சொல்லியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு உண்டான முகநூல், வாட்ஸ்அப் புகைப்படங்களை விசாரணையின் போது பார்த்னோ என்றால், விசாரணை செய்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் எனக்கு பார்த்ததாக ஞாபகத்தில் இல்லை. என்னுடைய முதற்கட்ட விசாரணையில் புகார்தாரருக்கும், எதிரிக்கும் என்ன உறவு முறை என்று தெரிந்து கொண்டேனா என்றால், இருவரும் பழகிக் கொண்டு இருந்ததாகச் சொன்னார்கள்.

5. காதலர்களாகவோ அல்லது நண்பர்களாவோ பழகிக் கொண்டிருந்ததாக சொன்னார்களா என்றால், இருவரும் விரும்பியதாக சொன்னார்கள். அவர்களுக்கு இடையேயான பழக்கம் எத்தனை வருட காலம் இருந்தது என்பது பற்றி சொன்னார்களா என்றால், சிறிது நாட்களாக பழகி வந்ததாக சொன்னார்கள். புகார்தாரர் அவர் அளித்த புகாரில், புகார்தாரரும், எதிரியும் சில வருடங்களாக பழகி வந்ததாக சொன்னார்கள், ஆனால் நான் இந்த வழக்கிற்காக சிறிது நாட்களாக பழகி வந்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல. புகாதாரர் அளித்த புகார் மனுவில் எதிரி நவீன்குமார் தன்னை பின்தொடர்ந்து வந்து தகாத வார்த்தைகளால் திட்டியும், ஒருமையில் பேசியும் வருகிறார் என்று மட்டுமே தெரிவித்துள்ளார், அதனை நான் முதல் தகவல் அறிக்கையில் புகாரில் உள்ளவாறு பதிவு செய்துள்ளேன், மேற்படி எதிரி எப்போது இருந்து புகாதாரரை பின்தொடர்ந்து வருகிறார் என்பது குறித்தும், என்ன வார்த்தைகளால் திட்டினார் என்பது குறித்தும், தெளிவான விபரங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால், சரிதான், அளிக்கப்பட்ட புகாரை நான் அப்படியே முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்தேன்.

6. நான் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்துள்ளவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை நடக்காத சம்பவத்திற்கு அளிக்கப்பட்ட பொய்யான புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னிட்டு எதிரியை விசாரணைக்காகஅழைத்தேனா என்றால், அழைத்தேன், எதிரி ஆஜரானார். எதிரி எப்பொழுது, எத்தனை மணிக்கு காவல் நிலையம் ஆஜர் ஆனார் என்றால், அனைத்தும் புகார் மனு ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆவணங்களை பார்த்து தான் சொல்ல இயலும்.

மேற்படி புகார் மனு ரசீதினை நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையை அனுப்பும்போது உடன் சேர்ந்து அனுப்பினேனா என்றால், முதல் தகவல் அறிக்கை மட்டும் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன், புலன் விசாரணை அதிகாரி தான் மற்ற ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பினார்.

7. இந்த சம்பவத்தை பற்றிய முழு விபரமும் எனக்கு தெரியாது, ஆய்வாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையிலேயே நான் இந்த வழக்கிற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் சொல்வது போல் முதல் நிலை விசாரணையில் அனைத்தையும் முழுமையாக விசாரிக்காமல் வாய் மொழியாக மட்டும் விசாரணை செய்தேன் என்றால், சரிதான். நான் சொன்னவாறு சொன்ன தேதி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, ஆய்வாளரின் அறிவுரையை கேட்டு,எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரியை என்னுடைய முதற்கட்ட விசாரணையில் விசாரணை செய்ததாக தெரிவித்துள்ளேன் அவ்வாறு விசாரணை செய்த போது எதிரியிடம் வாக்குமூலம் ஏதேனும் பதிவு செய்தேனா என்றால், புகார் மனு ரசீதில் தான் இணைக்கப்பட்டுள்ளது, ஆவணத்தை பார்த்து தான் சொல்ல இயலும்.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

J.M. A.M.C.